பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 03 திங்கட்கிழமை 17.05.2021 கதிர் 59

பி.சி.ஆர். பரிசோதனை கோரி

## போகம்பரை சிறையில் கைதிகள் ஆர்ப்பாட்டம்!

போகம்பரை சிறைச்சாலையில் கைதிகள் குழுவொன்று அங்குள்ள கட்டடக் கூரையின் மீதுஏறிஎதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

கைதிகளுக்கு விரைவாக கொரோனா பரிசோதனை மேற்கொள்ளல் 2

# புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையில் கொத்தணி இன்று மாத்திரம் 261 பேர் கொரோனாவுடன் அடையாளம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 17

புதுக்குடியிருப்பில் உள்ள ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அங்கு கடமையாற்றும் பணியாளர்களில் 261 பேர் இன்று ஒரே நாளில் கொரோனா வைரஸ் தொற்றுடன் கண்டறியப்பட்டுள்ளதால் பெரும் பரபரப்பு நிலவுகின்றது.

புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையில் பலருக்குக் கொரோனா உறுதி செய்யப்பட்டதையடுத்து அங்கு பணியாற்றும் 926 பேருக்கும் இன்று அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு இடம்பெற்று பரிசோதனையில் கொரோனா கண்டறியப்பட்ட பணியாளர்களுக்கு முதல் கட்டமாக பி.சி.ஆர். பரிசோதனையும், ஏனைய பணியாளர்களுக்கு இரண்டாம் கட்டமாகவும் பி.சி.ஆர். பரிசோதனை இடம்பெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட குழுவினரே இன்று இந்த விசேட பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதேநேரம் இவ்வாறு கொரோனா கண்டறியப்பட்டவர்களின் வீடுகள், அவர்கள் பழகியவர்களின் வீடுகள் என ஆயிரத்தைத் தாண்டிய குடும்பங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டிய அவலமும் காணப்படுகின்றது.

குறித்த ஆடைத்தொழிற்சாலை அடிப்படை சுகாதார நடைமுறையைப் பின்பற்றாத காரணத்தால் மூடப்பட வேண்டும் எனப் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பல தடவைகள் சுட்டிக்காட்டியும் அதன் உரிமையாளர் தென் பகுதியைச் சேர்ந்தவர் என்பதன் அடிப்படையில் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதன் விளைவே இந்த நிலைமைக்குக் காரணம் எனத் தற்போது சுட்டிக்காட்டப்படுகின்றது.

# முள்ளிவாய்க்காலில் உறவுகளை நினைவேந்த நீதிமன்றம் அனுமதி

## நகர்த்தல் பத்திரம் மூலம் உடைந்தது தடை

**தமிழின அழிப்புப் படுகொலை நாளான முள்ளிவாய்க்கால் படுகொலை தினத்தை முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவேந்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு இன்று இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மேலும், முள்ளிவாய்க்காலில் நாளை கொரோனாத் தடுப்பு சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து இறுதிப் போரில் இறந்த உறவுகளுக்கு மக்கள் அஞ்சலி செலுத்த முடியும் என்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.** 2



முன்னணி நிறுவனத் தலைவர்

## பிரதீப் குணவர்தன தொற்றால் மரணம்



இலங்கையின் லக்சல மற்றும் சலுசல ஆகிய நிறுவனங்களின் தலைவரான பிரதீப் குணவர்தன, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலையில் 2

## மீண்டும் நாடு முடக்கம்!

மே 21 இரவு முதல் 25 அதிகாலை வரை

கொரோனாப் பரவலின் தீவிரம் அதிகரித்துவரும் நிலையில் மீண்டும் நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடு நடைமுறைக்கு வரவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் 21ஆம் திகதி இரவு 11 மணி தொடக்கம் 25ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை பயணக்கட்டுப்பாடு நடைமுறைக்கு வரும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

25 ஆம் திகதி அதிகாலை விலக்கிக் கொள்ளப்படும் சமூக முடக்கலானது மீண்டும் அதே நாள் (மே25) இரவு 11.00 முதல் மே28 அதிகாலை 04.00 மணி வரையிலும் தொடரும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற கொரோனாத் தடுப்பு செயலணிக் கூட்டத்தின் போது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கொரோனாவை ஒழிக்க ஒன்றிணைய வேண்டும்

ஆளும் – எதிரணியிடம் ஆதிவாசிகள் கோரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று நோயை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று ஆதிவாசிகள் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள கொரோனா வைரஸ் தொடர்பில் மொனராகலையில் வைத்து ஊடகங்களுக்கு இன்று கருத்து வெளியிட்ட 2

## 16 நாள்களில் 284 பேர் கொரோனாவால் பலி

*4 கர்ப்பிணிப் பெண்களும் சாவு*



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மே முதலாம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நான்கு கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 284 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி மே முதலாம் திகதி 9 பேரும், 2 ஆம் திகதி 9 பேரும், 3ஆம் திகதி 13 பேரும், 4ஆம் திகதி 11 பேரும், 5 ஆம் திகதி 14 பேரும், 6ஆம் திகதி 11 பேரும், 7 ஆம் திகதி 19 2

## தவிர்க்க முடியாத தேவையின்றி வீட்டிலிருந்து வெளியேறாதீர்கள்

மக்களிடம் மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

தவிர்க்க முடியாத தேவைகளுக்காக அன்றி, பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியேற வேண்டாம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

வெசாக் பண்டிகை முடியும் வரை பொதுமக்கள் பயணக் கட்டுப்பாடுகளைப் பேண வேண்டும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

பொதுமக்களின் ஆதரவு கொரோனா பரவல் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்த்துக்கொள்ள உதவியாக அமையும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் 2

## கொரோனாவை ஒழிக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர், இந்த நேரத்தில் அனைவருக்கும் ஒரு கடமை இருக்கின்றது என்றும் கூறினார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கட்சிகள், நிறம், இனங்கள், மதங்கள் மற்றும் அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டுக்காக உழைப்பது இந்த நேரத்தில் மிகவும் முக்கியமானது.

இருப்பினும், எதிர்க்கட்சியினர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்த ஒரு சில நடவடிக்கைகள் தொடர்பில் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

இதில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, கொரோனாவுக்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் இறந்தாலும் அவரிடம் பணம் இல்லை. எனவே, அதற்கான பணத்தைச் செல்வந்தர்கள் வழங்குவதற்கு முன்வருமாறு அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனிடையே, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில், கொரோனாவுக்கான தீவிர அறிகுறிகள் ஏதும் இல்லை என்றால் வீட்டில் இருக்குமாறு என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம். எனவே, நான் தற்போது வீட்டில் இருக்கின்றேன். வீட்டிலேயே மருந்துகளைப் பெறுவதற்கான முறை என்ன? உணவுப் பொருள்களை பெறும் முறை என்ன? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இப்படி முரண்படுவதை ஆளும் - எதிரணியினர் நிறுத்த வேண்டும். கொரோனாவை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும் - என்றார்.

## 16 நாள்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேரும், 8 ஆம் திகதி 22 பேரும், 9ஆம் திகதி 15 பேரும், 10 ஆம் திகதி 26 பேரும், 11ஆம் திகதி 23 பேரும் கொரோனாவால் பலியாகியுள்ளனர்.

அத்துடன், மே 12ஆம் திகதி 18 பேரும், 13ஆம் திகதி 24 பேரும், 14 ஆம் திகதி 29 பேரும், 15 ஆம் திகதி 20 பேரும், 16ஆம் திகதி 21 பேரும் இவ்வாறு கொரோனாவால் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனாவால் நேற்று (16) இரவு வரை 962 பேர் மொத்தமாக உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தவிர்க்க முடியாத ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மூன்று நாள்களில் பொதுமக்கள் வீட்டிலிருந்து ஒத்துழைத்ததைப் போன்று, அடுத்த 10 நாள்களும் பயணங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரதீப் குணவர்தன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றிரவு அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் முறை பொறியியலாளரான இவர், அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் தர நிர்ணய சபை ஆகியவற்றின் தலைவராகவும் கடமையாற்றி வந்துள்ளார்.

## போகம்பரை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் விரைவாக பிணை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த குழுவினர் இந்த ஆர்ப்பாட்டத்தை இன்றிலிருந்து முன்னெடுக்கின்றனர்.

சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகின்றது.

சுமார் 40 கைதிகள் வரை இவ்வாறு கூரை மீது ஏறி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## முள்ளிவாய்க் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இறுதிப் போரில் கொல்லப்பட்ட தமிழ் உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் படுகொலையின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் தினம் உலகெங்கிலும் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் இந்த நினைவேந்தல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த தடை உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி இன்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த நகர்த்தல் பத்திரம் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கொரோனாத் தடுப்பு சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து நாளை அஞ்சலி நிகழ்வுகளை நடத்த முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# அடுத்த மூன்று வாரங்கள் தீர்க்கமானவை ஆகுமாம்

## இராணுவத் தளபதி கூறுகின்றார்



போக்குவரத்து கட்டுப்பாடுகள் அல்லது தனிமைப்படுத்தல் என்பன வார இறுதி நாள்களையோ அல்லது நீண்ட விடுமுறை நாள்களையோ அடிப்படையாகக் கொண்டு அமுல்படுத்தப்படுவதில்லை.

கொவிட் பரவல் நிலைமை தொடர்பில் மதிப்பீடு செய்து , விஞ்ஞானபூர்வமாகவே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும். எவ்வாறிருப்பினும் அடுத்த 3 வாரங்கள் தீர்க்கமானம் மிக்கவையாகும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனவே அடுத்த மூன்று நாள்களில் நாட்டில் கொவிட் பரவல் நிலைமை எவ்வாறு காணப்படுகிறது என்பது மதிப்பீடு செய்யப்பட்டு, மருத்துவத்துறை நிபுணர்கள் உள்ளிட்டவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பணிப்புரைக்கு அமைய போக்குவரத்து கட்டுப்பாடுகள் தொடர்பில் பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி சுட்டிக்காட்டினார்.

அடுத்த வாரம் வெசாக் பண்டிகையுடன் நீண்ட விடுமுறை காலம் என்பதால் நாடளாவிய ரீதியில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் போதே இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்தார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விரைந்து செய்ய வேண்டியவை

கொரோனா வைரஸ் தொற்று நிலைமை மோசமான கட்டத்தை நோக்கி நகர்கின்ற நிலையில் ஆளும் தரப்புக்கு –அதிகார பீடத்துக்கு – எதிரான உணர்வலைகள் நாடு முழுவதும் பீறிட்டுக் கிளம்புகின்றன என ஆங்காங்கே இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொரோனாக் கட்டுப்பாட்டு நிலைமை கண்ணுக்கு முன்னால் கைநழுவிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலும் கூட முன்னுரிமையை வரிசைப்படுத்துவதில் அரசுத் தரப்பு பெரும் தவறிழைக்கின்றது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் தீர்மானமாக எழுந்துள்ளது.

“முன்னுரிமையைத் தீர்மானிப்பதில் அரசு பெரும் குழப்பமடைந்துள்ளது. தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதுதான் இன்றைய நிலையில் பிரதான – முக்கிய – விவகாரம். தேசியப் பிரச்சினை அதுதான். ஆனால் அரசு பொருளாதாரப் பாதிப்புப் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றது.

*“இந்த அரசில் இருக்கும் ஜனாதிபதிக்கு மேலதிகமாக இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள் – மஹிந்த ராஜபக்ஷவும், மைத்திரிபால சிறிசேனவும் – இருக்கின்றார்கள். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்தர்ப்பத்தில், தொற்றுடன் போராடுவதற்கான தேசியத் தலைமை ஒன்றே இப்போது அவசரமாகத் தேவைப்படுகின்றது.*

*“நாட்டின் பொது மக்கள் பலமாகவும், வலுமிக்கவர்களாகவும் இருந்தால்தான் நாட்டின் பொருளாதாரம் வலிமையாக நின்று பிடிக்கும். ஆகவே, முக்கியத்துவம் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கே கொடுக்கப்பட வேண்டும். அடுத்ததுதான் பொருளாதாரத்தைப் பேணுவது.”*

– இப்படி ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கா கூறியிருக்கின்றார்.

சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இதனைப் பச்சையாகவே கூறியிருந்தார்.

பொருளாதாரம் படுத்தால் பின்னரும் தூக்கி நிறுத்தலாம். ஆனால் உயிர்களை இழந்தால் மீண்டும் அவற்றை நாம் பெற முடியாது. ஆகவே பொருளாதாரப் பாதிப்புக்கு முக்கியத்துவம் அளித்து, தொற்றுப் பரவலுக்கும் அதன் மூலம் உயிரிழப்புகளுக்கும் இடம்கொடுக்கக் கூடாது. அரசு விவேகத்துடனும் துணிச்சலுடனும் முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்திருந்தார்.

இப்போதைய தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக முழு நாட்டையும் ஒரு சொற்ப காலத்துக்கு முழுமையாக முடக்கும்படி பல தரப்புகளினாலும் அழுத்திக் கூறப்பட்ட போதிலும், அதற்கு இணங்குவதற்கு ஆட்சிப் பீடம் மறுத்து விட்டது. தொடர்ந்தும் மறுத்து வருகின்றது.

அதன் விளைவுதான் இத்தகைய வீச்சமான – வீரியமான – தொற்றுப் பரவலுக்குக் காரணம் என்று பல தரப்புகளும் குற்றம் சுமத்துகின்றன.

அரசுடன் சேர்ந்து தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் மருத்துவ – சுகாதார சேவைகளைச் சேர்ந்த நிபுணர்களும், பொதுச் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் மாறி, மாறி பகிரங்கமாகவும் உள் கூட்டங்களிலும் இந்தப் பொது முடக்கத்துக்கு அழுத்தம் கொடுத்தும் கூட ஆளும் தரப்பு மசியவேயில்லை.

கொரோனாக் கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் உரிய நிபுணர் குழுவின் வழிகாட்டுதல், ஆலோசனைகள், தீர்மானங்கள், பரிந்துரைகள் ஆகியவற்றுக்கு அமையவே எடுக்கப்படுகின்றன என்று கூறப்பட்டாலும், ஜனாதிபதி செயலகத்தின் நான்கு சுவர்களுக்கு மத்தியிலேயே இவ் விடயம் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன என்றும், அங்கே இந்த நிபுணர்களின் பரிந்துரைகள் அர்த்தமற்றுப் போய் விடுகின்றன என்றும் விடயமறிந்த உள்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனாத் தொற்றுடன் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை எந்தச் சமயத்திலும் ஆயிரத்தை எட்டும் நிலைமை. தினசரி தொற்றாளர்கள் எண்ணிக்கை இரண்டாயிரத்து ஐந்நூறைத் தாண்டுகின்றது.

ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிகின்றமையால் நோய்த் தொற்றுக்கு உள்ளான போதிலும் அதிகளவிலான குணங்குறிகளைக் காட்டாதோர், தொற்றின் உபாதைகளினால் சிரமப்படாதோர் போன்றோரை ஆஸ்பத்திரியில் சேர்க்காமல் வீட்டில் வைத்தே வைத்தியம் செய்யும் முடிவுக்கு அரசுத் தரப்பு தள்ளப்பட்டுள்ளது. அந்தளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

இந்த நெருக்கடியிலிருந்து விரைந்து மீண்டெழுவதற்கு உடன் செய்ய வேண்டியவை இரண்டு விடயங்கள்.

ஒன்று – முழு நாட்டையும் ஒரேயடியாக முடக்கி, நடமாட்டங்கள், போக்குவரத்துக்களை ஸ்தம்பிக்கச் செய்து, தொற்றுப் பரவல் வீச்சத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

அடுத்தது – விரைந்து தடுப்பூசிகளை நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் செலுத்தி காப்பரணை உருவாக்க வேண்டும்.

இந்த இரண்டு விடயங்களிலுமே நாட்டின் ஆட்சித் தலைமை மெத்தனமாக இருப்பதே நம் துரதிஷ்டம்.

# வவுனியாவில் மற்றுமோர் இடம் தொல்லியல் திணைக்களம் வசம்

## பௌத்த அடையாளங்கள் உள்ளனவாம்





வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மன்னகுளம் பகுதியில் பௌத்த வழிபாடு இடம்பெற்றமைக்கான சான்றுகள் உள்ளன என தொல்லியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

பழைய செங்கல் இடிபாடுகளுடன் கூடிய பௌத்த வழிபாட்டு அடையாளங்கள் குறித்த பகுதியில் இருக்கின்றன என தொல்லியல் திணைக்களம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தெரிவித்துள்ளது.

வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 255 – பி கிராம அலுவலர் பிரிவில் மன்னகுளம் பகுதியில் தொல்பொருள் சின்னங்கள் கொண்ட தளமொன்று உள்ளன என சிங்க ரெஜிமென்டின் 16 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்து, வவுனியா தொல்பொருள் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினரால் அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த பகுதியில் 60 – 70 சென்ரிமீற்றர் உயரத்திற்கு இடைப்பட்ட 12 கற் தூண்களைக் கொண்ட கட்டட அமைப்பு இருப்பதாகவும் அதில், சிங்கள எழுத்துக்களால் பூசை தொடர்பாக எழுதப்பட்டுள்ளதாகவும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அத்துடன், இந்த தொல்பொருள் அடையாளம் கி.மு எட்டு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு உரியது எனவும், அங்கு பழைய கட்டடங்களுக்கான செங்கல், ஓடுகள் இருக்கின்றன எனவும் தெரிவித்துள்ள குறித்த திணைக்களத்தினர், இக்கட்டடம் 50 சதுரமீற்றர் பரப்பளவைக் கொண்டதாக இருந்திருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா வடக்கில் வெடுக்குநாறி மலை, கோடலிபறிச்சான் பகுதியைத் தொடர்ந்து தற்போது, மன்னகுளம் பகுதியையும் தொல்லியல் திணைக்களத்தினர் உரிமை கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தி அதிகாரி ஒருவர் மீது தாக்கு!



பிலியந்தலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசம் ஒன்றில் நேற்று மாலை அபிவிருத்தி அதிகாரி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

கெஸ்பேவ பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தெல்தர மேல் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு பொறுப்பான அபிவிருத்தி அதிகாரி ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசம் ஒன்றின் மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொடுத்த பின்னர் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் இவ்வாறு தாக்குதலில் ஈடுபட்டுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் அவரைக் கைது செய்வதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று கடந்த டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த பண்டாரகம, அட்டலுகம பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 6 வருட சிறைத்தண்டனை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டதாக பொலிஸ்மா அதிபர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மலையக சேவையில் விசேட கல்வி நிகழ்ச்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மலையக சேவையில் விசேட கல்வி நிகழ்ச்சி ஆரம்பமாகியுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் பெயர் குறிஞ்சிக் குருகுலம் என்பதாகும். இதனை தினந்தோறும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை மலையக சேவையின் அலை வரிசையில் கேட்கலாம்.

கொவிட் பெருந்தொற்று சூழலில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவது நிகழ்ச்சியின் நோக்கம் என மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.ஆர்.சத்தியேந்திரா தெரிவித்தார்.

ஆரம்பத்தில் 11 ஆம் தர மாணவர்களுக்காக பாடம் நடத்தப்படுமென சத்தியேந்திரா குறிப்பிட்டார். அவர் குறிஞ்சிக் குருகுலம் அறிமுக நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பெ.விக்னேஸ்வரன் உரையாற்றுகையில் – ஆற்றல் மிக்க வளவாளர்களைக் கொண்டு ஒவ்வொரு பாடமும் போதிக்கப்படும் என்றார். அவர்களில் பாடநூலாக்கல் குழுக்களின் அங்கத்தவர்கள், பரீட்சைத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், ஆசிரிய கல்வி ஆலோசகர்கள் ஆகியோரும் அடங்குவார்கள்.

குறிஞ்சிக் குருகுலம் நிகழ்ச்சியை கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சு, மத்திய மாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து மத்திய மாகாண கல்வித் திணைக்களம் நடத்துகிறது.


இதனை மத்திய மாகாண நேயர்கள் 90.1, 107.3, 107.5 ஆகிய பண்பலை வரிசைகளில் கேட்கலாம். ஏனைய நேயர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slbc.lk ஊடாகவும், அதன் உத்தியோகபூர்வ செயலியான SLBC-App இலும் கேட்கலாம்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இந்திய ஆய்வாளர்களின் கொரோனா எதிர்ப்பு மருந்து

# இன்று முதல் பாவனைக்கு வருகிறது!




'டி-டியோக்ஸி டி-குளுகோஸ் (2-டிஜி)' என்ற கொரோனா தடுப்பு மருந்தினை டி.ஆர்.டி.ஓ. அமைப்பின் ஆய்வகமான இன்ஸ்ட்டிடியூட் ஒஃப் நியூக்ளியர் மெடிசன் அண்ட் அலைட் சயின்ஸ் (ஐ.என்.எம்.ஏ.எஸ்.) உடன் டாக்டர் ரெட்டிஸ் மருந்து நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ளது.

'சென்டர் ஃபோர் செலுலார் அன்ட் மொலிகுலர் பயோலஜி' (சி.சி.எம்.பி.) உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த மருந்தின் மூலக்கூறுகள் கொரோனா வைரஸுக்கு எதிராகச் சிறப்பாகச் செயல்பட்டமை கண்டறியப்பட்டது.

இந்த முடிவுகளின் அடிப்படையில் கடந்த ஆண்டு மே மாதம் மத்திய மருந்துத் தரக்கட்டுப்பாடு அமைப்பு இரண்டாவது கட்ட மருத்துவப் பரிசோதனை நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து டாக்டர் ரெட்டீஸ் நிறுவனம், டி.ஆர்.டி.ஓ. ஆகியவை இணைந்து மருத்துவப் பரிசோதனையை கொரோனா நோயாளிகளிடம் நடத்தினர். இரண்டாவது கட்டப் பரிசோதனை இந்தியாவில் 6 மருத்துவமனைகளில் நடந்து வெற்றியளித்ததையடுத்து, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாவது கட்டப் பரிசோதனைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மூன்றாவது கட்ட மருத்துவப் பரிசோதனை 2020 டிசெம்பர் முதல் 2021 மார்ச் வரை 27 கொவிட் மருத்துவமனைகளிலிருந்த 220 கொரோனா நோயாளிகளிடம் நடத்தப்பட்டது. இந்த மூன்றாவது கட்ட மருத்துவப் பரிசோதனையில் பெறப்பட்ட முடிவுகள் அனைத்தும் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2-டிஜி மருந்து கொரோனா நோயாளிகளிடம் சிறப்பாகச் செயற்படுகிறது என்பதும் ஒக்சிஜனை நம்பியிருக்கும் நோயாளிகளுக்கு நல்ல பலன் அளிக்கிறது என்றும் ஒக்சிஜன் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள் விரைவில் அதன் தேவையில்லாமல் இருக்கும் வகையில் குணமடைகின்றனர் எனவும் அறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து, 2-டிஜி மருந்தை அவசர காலத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள மத்திய மருந்துக் கட்டுப்பாட்டு அமையம் அனுமதி அளித்துள்ளது. இந்த மருந்து தூள் வடிவில் இருப்பதால், இதனைத் தண்ணீரில் கலந்து குடிக்க முடியும். இந்த மருந்து உடலில் சென்று வைரஸால் பாதிக்கப்பட்ட செல்களை அடையாளம் கண்டுபிடித்து ஒருங்கிணைத்து, புதிதாக எந்த செல்களும் பாதிக்கப்படாமல் தடுத்து வைரஸ் வளர்ச்சியையும் தடுக்கிறது என்று கூறப்படுகிறது.

சிறிய பொதிகளில் அடைக்கப்பட்டு விநியோகத்துக்கு வரும் 2-டிஜி கொரோனா மருந்தைத் தண்ணீரில் கலந்து நோயாளிகள் குடிக்கக் கொடுக்கலாம். இதன் மூலம் ஒக்சிஜன் உதவியோடு இருக்கும் தீவிர கொரோனா நோயாளிகள் விரைவில் அதிலிருந்து மீள முடியும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மருந்தினை மருத்துவமனைகளில் வைத்தியர்களின் மேற்பார்வையில் மட்டும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### ஹரியானாவில் விவசாயிகள் மீது தடியடி முதல்வர் கலந்துகொண்ட நிகழ்வால் குழப்பம்

ஹரியானா முதல்வர் மனோகர் லால் கட்டாருக்கு எதிராகப் போராடிய விவசாயிகள் மீது தடியடி நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்திய மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஆயிரக்கணக்கான விவசாயிகள் டெல்லியில் போராடி வருகின்றனர். இப்போராட்டத்தில் பஞ்சாப், ஹரியானா மாநில விவசாயிகள் பெருமளவில் பங்கேற்றுள்ளனர். ஹரியானா, பஞ்சாப் மாநிலங்களிலும் தொடர்ந்து விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் ஹரியானாவின் ஹிசர் மாவட்டத்தின் ஹன்சி பகுதியில் 500 படுக்கைகள் கொண்ட கொரோனா சிறப்பு மருத்துவமனை ஒன்றின் திறப்பு விழாவுக்கு அம்மாநில முதல்வர் மனோகர் லால் கட்டார் நேற்று சென்றபோது அவருக்கு எதிராக விவசாயிகள் கோஷம் எழுப்பினர். காவல் துறையினர் வைத்திருந்த தடுப்புகளையும் விவசாயிகள் தகர்த்தெறிந்தனர். இதனால், தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் காவல் துறையினர் கூட்டத்தைக் கலைத்தனர். இதில் பல விவசாயிகள் காயம் அடைந்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 84 நாள்களுக்குப் பின்னரே!

### இந்திய மத்திய அரசு தகவல்



கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்திக்கொள்ள 84 நாள்களுக்கு பிறகே ஒன்லைனில் திகதி ஒதுக்கப்படும் என்று மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது. இரண்டாவது டோஸ் தடுப்பூசிக்காக ஒன்லைனில் பதிவு செய்தவர்கள் வேறு திகதிக்கு மாற்றிக் கொள்ளவும் அனுமதி அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கறுப்புப் பூஞ்சை நோய்க்குக் காரணம் என்ன? எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் விளக்கம்




இந்தியா முழுவதும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாவது அலை மக்களைப் பாதித்து வரும் தருணத்தில் கொரோனாத் தொற்றில் இருந்து குணமான, குணமாகிற நோயாளிகளுக்கு, 'மியூகோர்மைகோசிஸ்' என்று அழைக்கப்படுகிற கறுப்புப் பூஞ்சைநோய் தாக்குவதை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதுவும் ஓர் அரிதான தொற்று நோய் என்றும் இது, பொதுவாக மண், தாவரங்கள், அழுகும் பழங்கள் மற்றும் காய்கறிகளில் காணப்படுகிற ஒருவகைப் பூஞ்சையால் உருவாவதாகவும் சொல்லப்படுகிறது. இந்த நோய் நெற்றி நரம்பு மண்டலம், மூளை மற்றும் நுரையீரல் போன்றவற்றைத் தாக்குவதாகவும் இதுவும் உயிருக்கு ஆபத்தான நோய்தான் என்றும் எச்சரிக்கப்படுகிறது.

கொரோனா நோயாளிகளைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு உயிரைக் காக்க தருகிற ஸ்டீராய்ட் மருந்துகளால் இந்த நோய் தூண்டப்படலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இதனை எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் ரன்தீப் குலேரியாவும் உறுதிப்படுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் அளித்துள்ள விளக்கத்தில், கடந்த சில வாரங்களாக பல்வேறு மாநிலங்களிலும் கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்கள் கறுப்புப் பூஞ்சை நோய்த் தொற்றுக்கு ஆளாகி, உயிரிழப்பும் ஏற்படுகிறது. இந்தத் தொற்றுக்கு ஆளாகுபவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இந்தக் கறுப்புப் பூஞ்சை நோய்த் தொற்று மனிதர்களுக்குப் புதிதானதல்ல. ஆனால், கொரோனா வைரஸ் பாதிப்பால் ஒருவரது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும்போது எளிதாக இது மனிதர்களைத் தாக்குகிறது. காற்று, மண் மற்றும் உணவில் கூட இந்த கறுப்பு பூஞ்சை நோய் பக்றீரியா இருக்கலாம். ஆனால், இதன் தீவிரத்தன்மை மிகக் குறைவுதான்.

ஆதலால், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு குணமடைந்தாலும் வெளியே செல்லும்போது, முகக்கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும். குறிப்பாக கட்டுமானப் பகுதிகளுக்குச் செல்லும்போது, முகக்கவசம் அணிய வேண்டும். எய்ம்ஸ் மருத்துவனையில் கறுப்பு பூஞ்சையால் பாதிக்கப்பட்டு 23 பேர் சிகிச்சையில் உள்ளனர். பல்வேறு மாநிலங்களில் 500 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சையில் இருக்கிறார்கள். இரண்டாம்தரத் தொற்றான இதற்கு அதிகமான கவனம் செலுத்த அனைத்து மருத்துவர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளோம்.

2003 ஆம் ஆண்டு சார்ஸ் தொற்று உருவானபோது கூட கறுப்புப் பூஞ்சை நோய்த் தொற்று ஏற்பட்டது. கொரோனா பாதிப்பின்போது, சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள், ஸ்டீராய்ட் மருந்தை அதிகம் எடுத்துக்கொண்டவர்கள் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். பெரும்பாலும் கொரோனாவில் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 முதல் 10 நாள்கள் ஸ்டீராய்ட் மருந்துகளைக் கொடுத்தாலே போதுமானது. மூளை, மூக்கு, கண்களில் பாதிப்பை ஏற்படுத்தும் கறுப்புப் பூஞ்சை நோயால், சில நேரங்களில் பார்வையை இழக்க நேரிடுகிறது. சில நேரங்களில் அது உயிருக்கே ஆபத்தாக முடியலாம் என்று அவர் எச்சரித்துள்ளார்.

## டெல்லியில் மேலும் ஒரு வாரம் ஊரடங்கு நீடிப்பு

கொரோனா பரவலைத் தடுக்கும் பொருட்டு டெல்லியில் முழு ஊரடங்கு அமுலில் உள்ளது. வைரஸ் பரவலின் வீதம் தொடர்ந்து உச்சத்தில் இருந்ததால் ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வந்தன. இந்த ஊரடங்கு நாளை நிறைவடையவுள்ள நிலையில் மேலும் ஒரு வாரத்துக்கு ஊரடங்கை நீடித்து டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து ஊடகங்களுக்குத் தகவல் அளித்த அவர், இந்த ஆரோக்கியமான சூழலை இழக்க விரும்பவில்லை. நிலைமையை முழுவதுமாகக் கட்டுக்குள் கொண்டு வர விரும்புகிறோம். அதன்படி நாளை முதல் மே 24 ஆம் திகதி காலை 5 மணி வரை ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது. டெல்லி மக்கள் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். இதைத் தவறவிட்டால் பாதிப்புகள் மீண்டும் அதிகரித்துவிடும். அப்படியொரு நிலைக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது எனத் தெரிவித்தார். ஊரடங்குக் காலத்தில் டெல்லியில் கொரோனாவால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சற்றுக் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. முழு ஊரடங்கின் பலனாக, டெல்லியில் கொரோனாவால் பாதிக்கப்படுவோர் அளவு 35 சதவீதத்திலிருந்து தற்போது 11 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும் கெஜ்ரிவால் குறிப்பிட்டார். டெல்லியில் நேற்று 5,430 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. தினசரி தொற்று குறைந்தாலும், உயிரிழப்பு அதிக அளவிலேயே தொடர்ந்தும் உள்ளது. நேற்று ஒரே நாளில் 337 பேர் உயிரிழந்தனர். 66 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சையில் உள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





## இந்தோனேஷியா ஜாவா தீவில்
# செல்பி மோகத்தால் ஏழு பேர் உயிரிழப்பு

இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் ஒரு படகில் 20 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர். படகு நடுக்கடலில் சென்றபோது அனைவரும் ஒரு இடத்தில் நின்று செல்பி எடுக்க விரும்பியுள்ளனர். அதன்படி அனைவரும் ஒரேபக்கம் செல்ல, படகு எதிர்பாராத விதமாக கவிழ்ந்தது. இதில் ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுகுறித்து விசாரணை நடத்திய ஜாவா பொலிஸ் உயர் அதிகாரி அதிகமானோர் பயணம் செய்ததே விபத்துக்கு காரணம் எனத் தெரிவித்துள்ளார். எப்படியாயினும், செல்பி மோகத்தால் ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

# தாக்குதல் தொடரும் இஸ்ரேல் அறிவிப்பு

காசா மீதான தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாஹு எச்சரித்துள்ள நிலையில், இது குறித்து அவசரமாக ஆலோசிக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவத்திற்கும், பலஸ்தீன ஹமாஸ் உள்ளிட்ட போராளி குழுக்களுக்கும் இடையேயான மோதல் 7 ஆவது நாளாக நீடிக்கிறது. ஜெருசலேமில் உள்ள மஸ்ஜிதுல் அக்சாவில் இருந்து பலஸ்தீனியர்களை விரட்டிய இஸ்ரேல் இராணுவத்தின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் டெல் அவிவ் மற்றும் பீர்பொ (Beersheba) நகரங்களின் மீது ஹமாஸ் போராளிகள் ரொக்கெட்டுகளை வீசினர்.

அதைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவம் காசா நிலப்பகுதி மீதி சரமாரியாக வான்வழி தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறது. இதில் 41 குழந்தைகள் உள்பட பலஸ்தீனர்கள் 149 பேர் கொல்லப்பட்டனர்.

காசாவின் முக்கிய கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. பதிலுக்கு ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 10 பேர் கொல்லப்பட்டனர். இன்று காலை காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் தலைவரின் வீடு தரைமட்டமாக்கப்பட்டது.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இன்று காலை டெல் அவிவ் நகரை நோக்கி ஹமாசின் ரொக்கெட்டுகள் பறந்தன.

இந்த நிலையில் தொலைக்காட்சியில் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாஹு, காசா மீதான தாக்குதல் தொடரும் என கூறினார்.

ஆனால், ஹமாஸ் போலன்றி தாங்கள் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என அவர் பேசினார். இதனிடையே, மோதலை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா. ஐ.நா. மற்றும் எகிப்து தூதர்கள் நடத்திய பேச்சுக்கள் எந்த பலனும் தராத நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் அவசரமாக கூடி நிலைமையை பற்றி விவாதிக்க உள்ளது.

இந்த மோதல் குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன், மிகுந்த கவலை தெரிவித்துள்ளார் என வெள்ளை மாளிகை கூறியுள்ளது.



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாஹு, பலஸ்தீன் அதிபர் மகமூது அப்பாஸ் ஆகியோருடன் அவர் தொலைபேசியில் பேசினார். அப்போது ஹமாஸ் தனது தாக்குதலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மகமூது அப்பாசிடம் கேட்டுக் கொண்டார்.

# இந்திய கொரோனா ஆலோசனை குழுவிலிருந்து மூத்த அறிவியல் விஞ்ஞானி இராஜினாமா

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல், வைரஸின் மாறுபாடுகளை கண்டறிதல் மற்றும் வைரசைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்க விஞ்ஞானிகள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இன்சகொக் (INSACOG) எனப் பெயரிடப்பட்டுள்ள அந்தக் குழுவில் மூத்த அறிவியல் விஞ்ஞானியும் வைரஸ் தொடர்பான ஆராய்ச்சியில் பிரபலமான வைராலஜி நிபுணருமான ஜீத் ஜமால் முக்கிய பொறுப்பில் செயற்பட்டு வந்தார்.



கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு சரிவர செயலாற்றவில்லை என்று அண்மையில் இவர் விமர்சனம் செய்திருந்தமை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக, பிரபல வெளிநாட்டுச் செய்தி நிறுவனமான நியூயோர்க் டைம்ஸ் செய்தி நாளிதழில் எழுதிய கட்டுரையில், 'கொள்கை ரீதியிலான முடிவுகள் எடுப்பதில், ஆதாரங்கள் அடிப்படையில் செயற்படாமல் பிடிவாதமாக இருந்ததாக' மத்திய அரசை விமர்சித்து இவர் எழுதியிருந்தார்.

மத்திய அரசின் கொரோனாவைக் கையாளும் முறை, குறைந்த அளவிலான பரிசோதனைகள், தடுப்பூசித் தட்டுப்பாடு போன்றவை குறித்தும் அவர் விமர்சித்திருந்தார். 'இந்தியாவில் கொரோனா, கட்டுப்பாட்டை மீறிச் செல்லும்போது இருக்கும் தரவுகளை மட்டும் வைத்துக் கொண்டு முடிவுகளை எடுப்பது மற்றொரு பாதிப்பு' எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும், கடந்த மூன்றாம் திகதி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், 'கொரோனாவின் புதிய வகைத் தொற்று தொடர்பாக மார்ச் மாதத் தொடக்கத்திலேயே மத்திய அரசில் உள்ள மூத்த அதிகாரிகளுக்கு விஞ்ஞானிகள் குழுவான இன்சகொக் (INSACOG) எச்சரிக்கை விடுத்தது.

அந்த மூத்த அதிகாரிகள் பிரதமர் மோடியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள். ஆனால், அந்த எச்சரிக்கையை மத்திய அரசு புறக்கணித்துவிட்டது என்று அந்த விஞ்ஞானிகள் குழுவில் இடம்பெற்றிருந்த பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு விஞ்ஞானி கூறியுள்ளார்' என்று இருந்தது. கொரோனா வேகமாகப் பரவலாம் என்று எச்சரிக்கை விடுத்தபோதும் அந்தப் பரவலைத் தடுக்க மிகப்பெரிய அளவில் எந்த விதக் கட்டுப் பாடுகளையும் விதிக்க மத்திய அரசு முன்வரவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் முகக்கவசம் அணியாமல் மத நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். ஆயிரக்கணக்கான விவசாயிகள் டெல்லி எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது வைரஸ் பரவலை அதிகரிக்கலாம் என்று மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் விஞ்ஞானி ஜீத் ஜமால் குழுவில் இடம்பெற்றிருந்த விஞ்ஞானிகள் தெரிவித்தனர் என ரொய்ட்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது. இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்த நிலையில் மத்திய அரசு மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. இந்த நிலையில், கொரோனா வைரஸ் பரவல் மற்றும் புதிய வகை கொரோனா வைரஸ் பரவலைக் கண்டறிதல் தொடர்பாக மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் குழுவில் இருந்து ஜீத் ஜமால் நேற்று ராஜினாமச் செய்துள்ளார்.

மத்திய அரசின் ஆலோசனைக் குழுவில் இருந்து ராஜினாமா செய்ததற்கான காரணத்தை அவர் தெரிவிக்காத போதும், அரசுடனான கருத்து மோதலே இதற்குக் காரணம் என்று பல்வேறு தரப்பில் இருந்தும் தகவல்கள் வெளியாகியுள்ளன. கொரோனா வைரஸ் தொடர்பாக மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் குழுவில் இருந்து மூத்த விஞ்ஞானி ராஜினாமா செய்துள்ள சம்பவம் பல சந்தேகங்களைத் தோற்றுகின்றன என சமூக வலைத்தளக் கருத்தாடல்களில் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

# வாரத்திற்கு 55 மணி நேரத்திற்கு மேல் வேலை பார்த்தால் உடல் நல பாதிப்பு

## WHO எச்சரிக்கை

வாரத்திற்கு 55 மணிநேரங்களுக்கு அதிகமாக வேலை செய்தால் மிகவும் மோசமான உடல் நல பாதிப்புகள் ஏற்படும் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

இப்படி அதிக வேலை செய்பவர்கள் இந்த கொரோனா காலகட்டத்தில் இன்னும் மோசமான விளைவுகளுக்கு ஆளாக நேரிடும் என உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான மரியா நெய்ரா தெரிவித்துள்ளார்.




கடந்த 2016இல் மட்டும் அதிக வேலைப்பளுவால் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்பட்டு 7 லட்சத்து 45 ஆயிரம் பேர் இறந்துவிட்டனர் என உலக ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. இது 2000 ஆம் ஆண்டை விட 30 சதவிகிதம் அதிகம் என கணக்கிடப்பட்டுள்ளது.

## அதிவேக இணைய சேவைக்காக

# செயற்கைக் கோள்களை விண்ணுக்கு செலுத்தியது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம்

அமெரிக்காவின் தனியார் விண்வெளி நிறுவனம் ஸ்பேஸ் எக்ஸ். எலோன் மஸ்க் என்பவரால் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் வணிக ரீதியாகவும், தங்களின் சொந்த செயற்கைக்கோள்களையும் விண்ணில் செலுத்தி வருகிறது. உலகம் முழுவதும் அதிவேக இணைய சேவையை வழங்குவதற்காக ஸ்டார் லிங்க் என்ற திட்டத்தை செயல்படுத்த ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் முயற்சி செய்து வருகிறது. இதற்காக தலா 260 கிலோ எடையிலான செயற்கைக்கோள்களை தொடர்ச்சியாக விண்ணுக்கு அனுப்பி வருகிறது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம். அப்படி இதுவரை பல்வேறு கட்டங்களாக 1,500இற்கும் மேற்பட்ட செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பி வெற்றிகரமாக புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்தியுள்ளது.



இந்நிலையில், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மேலும் 52 செயற்கைக் கோள்களை பால்கான்-9 ரொக்கெட் மூலம் அமெரிக்காவின் புளோரிடாவின் கேப் கேனவெரலில் இருந்து நேற்று விண்ணில் செலுத்தியது. இந்த புதிய செயற்கைக்கோள்கள் அனைத்தும், ஏற்கெனவே அனுப்பப்பட்ட செயற்கைக் கோள்களுடன் இணைந்து செயல்பட உள்ளன. புவியின் சுற்றுப்பாதையில் செயற்கைக்கோள்கள் நிலை நிறுத்தப் பட்டதைத் தொடர்ந்து ரொக்கெட்டின் பூஸ்டர் வெற்றிகரமாக தரையிறக்கப் பட்டதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சூடுபத்தினசேனையில் மாத்திரம் பத்தொன்பது உடல்கள் அடக்கம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சூடுபத்தின சேனை பகுதியில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் பத்தொன்பது உடல்கள் அடக்கம் செய்யப்பட்டமையுடன், இதுவரைக்கும் நூற்று ஐம்பத்தாறு உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச் .எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்த நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சூடுபத்தின சேனையில் கொரோனாவில் உயிரிழந்தவர்களின் நூற்று ஐம்பத்தாறு உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. இதில் இரண்டு வெளிநாட்டவர்கள், பௌத்த மதத்தவர் ஒருவர், இந்து மதத்தவர் மூன்று, கிறிஸ்தவ மதத்தவர் ஆறு பேரின் உடல்கள் அடங்களாக நூற்று நாற்பத்தி நான்கு இஸ்லாம் மதத்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக மரணிப்பவர்களின் தொகை அதிகரித்து காணப்படுகின்றது. புதுவருட கொத்தனிக்கு பிறகு தற்போது நோன்பு பெருநாளுக்கு பின்னரான வைரஸ் தாக்கமும் உருவாகலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் சனிக்கிழமை ஓட்டமாவடி பிரதேசத்தில் மாத்திரம் அதிக கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக ஓட்டமாவடி பிரதேசத்தில் எவரும் உயிரிழக்காத வகையில் விழிப்புடன் செயற்பட வேண்டும். எனவே முன்னர் அரம்பிக்கப்பட்ட கிராம மட்ட குழுவினரை மீண்டும் உருவாக்க வேண்டும். இதன் மூலம் வேலைத் திட்டங்களை மேற்கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வெளியில் இருந்து நோன்பு காலத்தில் யாரும் வருகை தந்திருந்தால் அவர்களை எமக்கு தெரியப்படுத்தி அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தும் பட்சத்திலும் எமது பகுதியினை காப்பாற்ற முடியும். எனவே எமது பிரதேசத்தில் கொரோனா தாக்கம் அதிகரிக்காத வகையில் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கு மாறு வேண்டுகின்றேன்



## சிறுவனை தீண்டிய புடையன் பாம்பு

திருகோணமலை-மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பகொட்ட பகுதியில் வீட்டுக்கு முன்னால் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை, புடையன் பாம்பு தீண்டிய சம்பவமொன்று, நேற்று காலை பதிவாகியுள்ளது.

சிறுவன் மயக்கமுற்ற நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை, கம்பகொட்ட பகுதியைச் சேர்ந்த தேவிந்த பிரசாந் (10 வயது) எனும் சிறுவனையே இவ்வாறு பாம்பு தீண்டியுள்ளது.

சிறுவன் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டமாவடியை சேர்ந்த பெண்ணொருவர் பெருநாள் தினத்தில் சவுதியில் மரணம்

மட்டக்களப்பு -கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், பெருநாள் தினமான 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை சவுதியில் மரணமடைந்துள்ளார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் சவுதிநாட்டுக்குபணிப்பெண்ணாக சென்ற கயாத்து முகம்மது ஆயிஷா பீவி எனும் 46 வயது டைய பெண்ணே மரணமடைந்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தாயான இவர், மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணமடைந்துள்ளார் என்று சவுதியில் இருந்து வைத்திய அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளன என குடும்பத்தினர் தெரிவித்தனர்.

மரண மடைந்த குறித்த பெண்ணின் ஜனாஸாவை, சவுதி நாட்டில் நல்லடக்கம் செய்ய ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன என குடும்ப உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பிலும் தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின்படி வெளியே செல்ல அனுமதி

இலங்கையில் பயணத்தடை தளர்த்தப்பட்டுள்ளபோதும் தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கமான ஒற்றை எண்கள் கொண்டவர்கள் மாத்திரமே வெளியில் செல்ல இன்று (திங்கட்கிழமை) அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மட்டக்களப்பில் பெருமளவான மக்கள் வீதிகளில் நடமாடியதை தொடர்ந்து பொலிஸாரினால் தேசிய அடையாள அட்டை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது இரட்டை எண்கள் கொண்டவர்கள், எச்சரிக்கை விடுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது .

மேலும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்படுவதுடன் அநாவசியமாக வெளியில் நடமாடு வதனை மக்கள் தவிர்த்துக்கொள்ளுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிழக்கு மாகாண மக்களும் வீட்டில் விளக்கேற்றி முள்ளிவாய்க்கால் அஞ்சலி செலுத்துவோம்

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

நாளை 18, ஆம் திகதி கிழக்கு மாகாண மக்கள் உணர்வு பூர்வமாக தமது வீடுகளில் விளக்கேற்றி முள்ளிவாய்க்காலில் கடந்த 2009,மே,18,இல் ஆகுதியான மக்களை நினைவு கூருவோம் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கைத் தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் 12,ஆவது ஆண்டு நினைவு தொடர்பாக மேலும் ஊடகங்களுக்கு கருத்து கூறுகையில்.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த லட்சக்கணக்கான மக்களின் நினைவுகூரும் தினம் மே.18 ஆம் திகதியாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இக்கட்டான காலங்களில் எல்லாம் முள்ளிவாய்க்கால் நினைவு வணக்கத்தை 2010, மே,18,ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு வருடங்களும் தமிழ்தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் உணர்வு பூர்வமாக ஆலயங்களில் பூசை



வழிபாடுகளுடனும், கத்தோலிக்க தேவாலயத்தில் ஆராதனை வணக்கத்துடனும் தொடர்ச்சியாக செய்து வந்தமை யாவரும் அறிந்த ஒன்றே. இந்தவருடமும் அதே போல் தற்போதைய கொரோனா நோய் தாக்கத்தை கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளை பேணி நினைவு தினத்தை அனுஷ்டிப் பதற்கான சில ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

இந்நிலையில் தமிழ்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த எமது உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாலிபர் அணி தலைவர்கள் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், மகளிர் அணி உறுப்பினர்கள் என 22,பேருக்கு நீதவான் நீதிமன்றங்கள் மூலமாக தடை உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

நீதிவான் நீதிமன்ற தடை உத்தரவுகளை மதித்தும், தற்போதய கொரோனா நோய் தாக்கத்தை கருதிக் கொண்டும் நாளை மே18, ஆம் திகதி மாலை 6, மணிக்கு அல்லது பொருத்தமான ஒரு நேரத்தில் அனைவரையும் இல்லங்கள் தோறும் விளக்கேற்றி உயிர்நீத்த உறவுகளை நினைந்து இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

2010ஆம் ஆண்டு வடகிழக்கில் முதலாம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தினம் நடத்த முடியாத மிகவும் பயங்கர அச்சுறுத்தல் நிலவியபோது மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலயத்திலும், மட்டக்களப்பு மாமாங்கேஷ்வர ஆலயத்திலும் மிகவும் உணர்வு பூர்வமாக முள்ளிவாய்க்கால் நினைவு வணக்கம் தமிழ்தேசியக் கூட்டமைப்பால் செய்யப்பட்டதையும் குறிப்பிட்டார்.

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு உலர் உணவு வழங்கிய வியாழேந்திரன்

மட்டக்களப்பு மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் நேரில் சென்று வழங்கிவைத்தார்.

அரசாங்கத்தினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் வறிய மக்களுக்கு சுமார் 10,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கி வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கிரான்குளம் பிரதேசத்திலுள்ள 2 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதிகளில் வசிக்கும் 467 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொருள்களை வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு மக்களை சிரமத்திற்குள்ளாக்காத வாறு, வீடு வீடாகச் சென்ற இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அவர்களை நலம் விசாரித்ததுடன், குறைகளையும் கேட்டறிந்து கொண்டு அவர்களுக்கான நிவாரண பொதிகளையும் வழங்கிவைத்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடரில் ஆண்கள் பிரிவில் சம்பியனானார்

# ரபேல் நடால்



இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடால் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பைக் கிளறியிருந்த இந்தப் போட்டியில் ரபேல் நடால், உலகின் முதல்நிலை வீரரான நோவக் ஜோகோவிச்சை எதிர் கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை 7-5 என்ற கணக்கில் நடால் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் தீவிரமாக விளையாடிய ஜோகோவிச், செட்டை 6-1 என எளிதாகக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். இருவரும் தலா ஒரு வெற்றியைப் பெற்றதால், வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செட் விறுவிறுப் படைந்தது. இதில் நிதானத்துடனும் நுணுக்கத்தோடும் விளையாடிய நடால், செட்டை 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி சம்பியன் பட்டத்தையும் வென்றார்.

இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடரில்நடால்வெல்லும்பத்தாவது சம்பியன் பட்டம் இதுவாகும். முன்னதாக, 2005, 2006, 2007, 2009, 2010, 2012, 2013, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் இவர் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

## இந்திய அணியில் ஹார்திக் பாண்ட்யாவை சேர்க்காதது சரியே!

### முன்னாள் தேர்வுக் குழு உறுப்பினர் சரன்தீப்சிங் பேட்டி

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தேர்வுக் குழு உறுப்பினர் சரன்தீப்சிங் ஊடகமொன்றுக்கு அளித்த ஒரு பேட்டியில், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான இந்திய அணியில் ஹார்திக் பாண்ட்யாவைச் சேர்க்காதது ஏன்? என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. முதுகுவலி காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்த பிறகு அவரால் வழக்கம்போல தொடர்ந்து பந்து வீச முடியவில்லை.

இந்திய அணிக்காக விளையாடும் பதினொருவரில் அவர் இடம் பெறும்போது ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட்டில் 10 ஓவர்களும், ரி-20 போட்டியில் 4 ஓவர்களும் பந்து வீசியாகவேண்டும். ஒரு துடுப்பாட்ட வீரராக மட்டும் அவர் விளையாட முடியாது. அவர் பந்துவீசவில்லை என்றால் அணியின் சமநிலையை அது பெரிய அளவில் பாதித்துவிடும். இதனால் கூடுதலாக ஒரு பந்துவீச்சாளரைச் சேர்க்க வேண்டி உள்ளது. சூர்யகுமார் யாதவ் போன்ற ஒரு துடுப்பாட்ட வீரரை வெளியே உட்கார வைக்க வேண்டியிருக்கிறது. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இதைப் பார்த்தோம்.

அணியில் இப்போது வாஷிங்டன் சுந்தர், அக்ஷர் பட்டேல் போன்ற சகலதுறை வீரர்கள் இருக்கிறார்கள். காயத்தில் இருந்து மீண்ட ரவீந்திர ஜடேஜா அணிக்குத் திரும்பியிருக்கிறார். ஷர்துல் தாகூர் கூட சகலதுறை வீரராக ஜொலிக்க முடியும் என்பதை நிரூபித்து இருக்கிறார். ஒரு சகலதுறை வீரராக ஹார்திக் பாண்ட்யா பந்து வீசவில்லை என்றால் அந்தப் பணியை இவர்களால் செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வரவுள்ள இந்திய அணியின் தலைவராக ஹார்திக் பாண்ட்யா நியமிக்கப்பட வேண்டும் என்று பலரும் கோரிக்கையை முன் வைத்துவரும் நிலையில் சரன்தீப்சிங்கின் இந்தப் பேட்டி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




## இத்தாலி ஓபின் மகளிர் டென்னிஸ் தொடரில்

### போலந்தின் இகா ஸ்வியடெக் சம்பியன்!



இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவை வென்று, போலந்தின் இகா ஸ்வியடெக் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கி யுள்ளார்.

இந்தப்போட்டியில் இரு வீராங்கனைகளும் கடுமையாகப் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், இகா ஸ்வியடெக் முழுமையாகத் தனது ஆதிக்கத்தைச் செலுத்தியிருந்தார். அவர், 6-0, 6-0 என்ற நேர் செட்களில் இலகுவாக வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடரில் இகா ஸ்வியடெக் பெறும் முதல் சம்பியன் பட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு முன்னாள் பயிற்சியாளர்

# ராமன் கடிதம்



இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக தேசிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ரமேஷ் பவார் நியமிக்கப்பட்டார்.முந்தைய இரு ஆண்டுகள் பயிற்சியாளராகப் பணியாற்றிய தமிழகத்தைச் சேர்ந்த டபிள்யூ.வி.ராமனும் இந்தப் பதவிக்கு விண்ணப்பித்திருந்தார். ஆனால், அவரது பெயர் தெரிவாகவில்லை.

இந்த நிலையில் ராமன், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சௌரவ் கங்குலிக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'பயற்சியாளராக எனது அணுகுமுறை மற்றும் தொழில் நெறிமுறைகள் குறித்து உங்களுக்கு வேறு விதமாக சொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். நிறைய மின்னஞ்சல்கள் என்னைப் பற்றிய அவதூறுகளோடு உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கக் கூடும். இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகளுக்குத் தெரிவிக்கப்பட்ட அந்தக் கருத்துக்கள் எனது விண்ணப்பத்தில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தியதா? என்பது எனக்குத் தெரியாது.

என்னைக்குறித்துதேவையற்றஅவதூறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. அது நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும். தேவைப்பட்டால் உங்களுக்கோ அல்லது கிரிக்கெட் சபை நிர்வாகிகளுக்கோ இது தொடர்பாக விளக்கம் அளிக்கத் தயாராக இருக்கிறேன். பயிற்சியாளராவதற்கு உகந்த திறமையில்லை என்று கூறியிருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால், இதைத் தவிர வேறு காரணங்களால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால் அது எனக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கும்.

எனது 20 ஆண்டுகால பயிற்சியாளர் வாழ்க்கையில் நான் எப்போதும் அணியின் நலனையே முதலில் முக்கியமாகக் கொண்டிருக்கிறேன். எந்த ஒரு தனிநபரும் விளையாட்டு அல்லது அணியை விடப் பெரியவர்கள் கிடையாது. பெண்கள் கிரிக்கெட்டை மேம்படுத்த என்னிடம் சில திட்டங்கள் உள்ளன. நீங்கள் ஆர்வமாக இருந்தால் அவற்றை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்வேன்' என்று கூறியுள்ளார்.

## இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடர் பங்களாதேஷ் அணியில் ஷகிப் அல் ஹசனுக்கு வாய்ப்பு!

இலங்கை கிரிக்கெட் அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடரிலிருந்து பங்களாதேஷ் அணியின் இரு முக்கிய வேகப்பந்து வீச்சாளர்கள் விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர்களான ரூபல் ஹொசைன் மற்றும் ஹசன் மஹ்மூத் ஆகிய இருவருமே இத்தொடரிலிருந்து விலகியுள்ளனர் எனவும், மூன்று போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் சர்வதேசத் தொடரில் சகலதுறை வீரரான ஷகிப் அல் ஹசன் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார் என்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் விளையாடிவந்த ஷகிப் அல் ஹசன் முதலில் அறிவிக்கப்பட்ட அணியில் இடம்பெற்றிருக்கவில்லை. எனினும், ஐ.பி.எல். தொடர் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நாடு திரும்பிய அவர் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளதோடு, மூன்றாவது இடத்தில் களமிறங்குவார் எனவும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 23 ஆம் திகதி டாக்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்துக்கு செல்லும் வீதிகளை தடைசெய்ய பொலிஸார் முயற்சி



இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் வருடம் தோறும் மே 18 தமிழ் மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைந்து உலகம் பூராகவும் உள்ள தமிழ் உறவுகள் மே 12 தொடக்கம் 18 வரை இனப்படுகொலை வாரத்தை அனுஷ்டிப்பதோடு, மே 18 ஆம் திகதி அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக அதிகளவான உறவுகள் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தில் மே 18 பாரிய அளவில் நினைவேந்தல் நிகழ்வு வருடம்தோறும் இடம்பெறும் .

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் குறித்த நினைவேந்தல் நிகழ்வை நடாத்த 27 பேருக்கு பொலிஸார் நீதிமன்றில் தடை உத்தரவு பெற்றுள்ள அதே வேளை திங்கட்கிழமை சுமார் 20 பேருக்கு மேல் நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற முயற்சிக்கின்றனர்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்துக்கு நுழையும் அனைத்து பாதைகளையும் தடை செய்வதற்கு பொலிஸார் வீதிக் தடைகளை இடுவதற்கு பொருள்கள் கொண்டு வந்து இறங்கியுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு பரந்தன் வீதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்துக்கு நுழையும் கப்பல் வீதி சந்தியில் பொலிஸ் நீதித்துறை போடப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குக

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

பெருந்தோட்டக் கம்பனிகள் 1,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, தொழிலாளர்கள் மீது பல்வேறு சுமைகளை சுமத்தி வருகின்றது.

இது தொடர்பாக தொழில் ஆணையாளர் பெருந்தோட்டக் கம்பனிகளையும் தொழிற்சங்கங்களையும் அழைத்து பேச்சு ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணி மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தொழில் ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

பெருந்தோட்டக் கம்பனிகள் 1,000 ரூபா சம்பள அதிகரிப்பின் பின்பு தொழிலாளர்கள் மீது அவர்களுடைய தொழில் மற்றும் தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக மிகவும் கடுமையாக நடந்து கொள்கின்றார்கள்.

தொழிலாளர்களை அடிமைகளாக நடத்துகின்றமை போல நடத்த முற்படுகின்றார்கள். ஒரு சில தோட்ட அதிகாரிகள் அடாவடித்தனமாகவும் தொழிலாளர்கள் தங்களுடைய அடிமைகள் எனவும் நினைத்து செயற்படுகின்றார்கள். இது தொடர்பாக தொழிலாளர்கள் தொடர்ந்தும் எங்களுடைய கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்கள்.

எனவே, தொழிலாளர்களின் நலன் சார்ந்த தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் நாங்கள் இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. குறிப்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் பெருந்தோட்டக் கம்பனிகள் பாராமுகமாகச் செயற்படுகின்றன.

1. ஒரு நாள் சம்பளத்துக்கான வேலைப் பழுவை அதிகரித்திருக்கின்றார்கள்.

2. நிரந்தர தொழிலாளர்களுக்கும் தற்காலிக தொழிலாளர்களுக்கும் இடையில் சம்பள முரண்பாட்டை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். அதாவது தற்காலிக தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா வழங்காமல் அவர்களுக்கு 730 ரூபாவையே நாட் சம்பளமாக வழங்கி வருகின்றார்கள்.

3. தொழிலாளர்களுக்கு மாதாந்தம் போதுமான வேலை வழங்காமை.

4. சமூக நல உத்தியோகஸ்தர்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு உத்தியோகஸ்தர்களை நியமிக்காதிருத்தல்.

5. மேலதிகமாக எடுக்கப்படுகின்ற கொழுந்திற்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவை வழங்காதிருத்தல்.



6. பெருந்தோட்டங்களை சுத்தப்படுத்தாமல் இருத்தல்.

7. பெருந்தோட்ட பகுதிகளில் தொழிலாளர்களுக்கு தெரியாமல் வெளியாருக்கு குத்தகைக்கு வழங்கல்.

8. தோட்டங்களில் உள்ள மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்காமை.

9. வயது முதிர்ந்த வேலையை விட்டு விலகிச் சென்றவர்களுக்கு இதுவரை காலமும் அவர்களுக்கு வழங்கிய தேயிலை தூள் இடை நிறுத்தப்பட்டுள்ளமை.

10. தொழிலாளர்களுக்கு சமூக நல சேம நல உதவிகளை இடைநிறுத்தியுள்ளமை.


11. தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை மறுக்கின்ற வகையில் தொழிற்சங்க சந்தாவை நிறுத்தியுள்ளமை.

இது போன்ற பல விடயங்களை தோட்ட கம்பனிகள் இடைநிறுத்தியுள்ளதுடன் தொழிலாளர்களை சுமுகமாக வேலை செய்வதற்கான ஒரு சூழலையும் இல்லாது செய்துள்ளார்கள்.

எனவே, இந்த விடயம் தொடர்பாக தங்களுடைய தலைமையில் கொழும்பில் பேச்சு ஒன்றை ஏற்பாடு செய்து இந்த முரண்பாடுகளை சுமுகமாக தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாங்களை கேட்டுக் கொள்வதுடன் மேற்குறித்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் தொழிலாளர்கள் பொறுமை இழந்து அமைதியற்ற ஒரு நிலைமை ஏற்படலாம். எனவே, இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன். இந்த கடிதத்தின் பிரதிகளை -

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, பெருந்தோட்ட கம்பனிகளின் பிரதான நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோருக்கும் கடிதங்களின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# விசேட சோதனை நடவடிக்கை யாழில் இன்று முன்னெடுப்பு!



யாழ்ப்பாணத்தில் பொலிஸாரினால் அடையாள அட்டை பரிசோதனை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாடளாவிய ரீதியில் 3 நாள்களாக அமுலில் இருந்த பயணத்தடை இன்று (திங்கட்கிழமை) அதிகாலை நான்கு மணியுடன் தளர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேசிய அடையாள அட்டை இலக்க முறைமைக்கு அமையவே இன்று முதல் பொதுமக்கள் வெளியே செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, அடையாள அட்டையின் இறுதி இலக்கங்கள் 1, 3, 5, 7, 9 என்ற ஒற்றை எண்ணாக இருக்குமானால், இன்று, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் 21, 23, 25, 27, 29, 31 ஆகிய திகதிகளில் வெளியில் செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல அடையாள அட்டையின் இறுதி இலக்கங்கள் 2, 4, 6, 8, பூச்சியம் என்ற இரட்டை எண்ணாக இருக்குமானால், நாளை மற்றும் 20, 22, 24, 26,28,30 ஆகிய இரட்டை இலக்க திகதிகளில் வெளியில் செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 37 கிராமஉத்தியோகத்தர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டன

இலங்கையில் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து இன்று (திங்கட்கிழமை) காலை முதல் மேலும் சில பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் மேலும் சில பிரதேசங்கள் இன்று (திங்கட்கிழமை) காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் (கொவிட் 19) பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக 10 மாவட்டங்களைச் சேர்ந்த 70 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இவ்வாறு தனிமைப்படுத்தப்படுகின்றன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 7 மாவட்டங்களைச் சேர்ந்த 37 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

# 9 கிராம சேவகர் பிரிவுகள் நுவரெலியாவில் தனிமையில்

நுவரெலியாவில் 9 கிராம சேவகர் பிரிவுகள், இன்று (திங்கட்கிழமை) காலை முதல் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என நுவரெலியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்தே இப்பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதாவது பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டியாகல, பொகவந்தலாவ, கெர்க்ஸ்வோல்ட், பொகவான, லொய்னோன் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் நோர்வூட் பிரிவுக்கு உட்பட்ட வெஞ்சர், இன்ஜஸ்ட்ரி, டிலரி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட என்பீல்ட் கிராம சேவகர் பிரிவும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் குறித்த பகுதிக்குள் உட்பிரவேசிக்கவும் அங்கிருந்து வெளியேறுவதும் தடை செய்யப்பட்டுள்ளதுடன் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி – தர்மபுரம் கிராம சேவையாளர் பிரிவு விசேட கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது

கிளிநொச்சி - தர்மபுரம் கிராம சேவையாளர் பிரிவு, விசேட கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பாக மேலதிக தீர்மானம் நாளை (செவ்வாய்க்கிழமை) எடுக்கப்படலாம் எனவும் சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். முடிவுகளின் அடிப்படையில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதாவது இவர்களில் 7 ஆம் யூனிற் பகுதியில் 7 பேருக்கும் 5 ஆம் யூனிற் பகுதியில் ஒருவருக்குமே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்தே உடன் அமுலுக்கு வரும் வகையில் தர்மபுரம் கிராம சேவையாளர் பிரிவு, சுகாதாரப் தரப்பினர் மற்றும் இராணுவம் ஆகியோரின் விசேட கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் இவ்விடயம் தொடர்பாக மேலதிக தீர்மானங்கள் நாளை மேற்கொள்ளப்படுமென மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அருந்ததி

+94 777 164 524
www.arunthathee.com

இணைய திருமண சேவை

## சூரியன் + செவ்வாய் உள்ள மணமகன் விபரம்

**17189|வ|1993**
பருத்தித்துறை|இந்து
Assistant Manager|HND
166 செ.மீ |சூ.செ:11
திருவோணம் (மகரம்)

**16739|வே|1991**
கிளிநொச்சி |இந்து|Qatar
Charted Accountant
178 செ.மீ |சூ.செ:02
அனுஷம் (விருச்சிகம்)

**17183|வே|1991**
நல்லூர்|இந்து|MA
Junior Executive at Bank
176 செ.மீ|சூ.செ:09
ஆய்யிலியம் (கடகம்)

**16817|வே|1991**
கைதடி|இந்து
Proprietor |A/L
155 செ.மீ |சூ.செ:01
அஸ்வினி (மேடம்)

**15658|ந|1991**
யாழ்.நகரம்|இந்து
Proprietor|NVQ
168 செ.மீ |சூ.செ:03
அவிட்டம் (மகரம்)

**11581|வே|1991**
கொக்குவில்|இந்து
Engineer|Canada
165 செ.மீ|சூ.செ : 06
மூலம் (தனுசு)

**17555|வே|1991**
கொழும்பு -06|இந்து
Network Engineer
183 செ.மீ| சூ.செ:06
மூலம்(தனுசு)|சண்டிலிப்பாய்

**17357|வி|1991**
யாழ்.நகரம்|இந்து
Engineer
168 செ.மீ | சூ.செ:06
சதயம் (கும்பம்)

**14394|வே|1991**
நீர்வேலி|இந்து|Australia
170 செ.மீ|சூ.செ:02
Customer Service|Degree
மிருகசீரிடம் (ரிஷபம்)

**15736|வே|1991**
நெல்லியடி |இந்து
175 செ.மீ | சூ.செ:06
Technical Officer
திருவோணம் (மகரம்)

**11562|வே|1991**
கொழும்பு-06|இந்து
178 செ.மீ | சூ.செ:11
Engineer
மூலம் (தனுசு)

**17612|வே|1991**
கரவெட்டி|இந்து|US
174 செ.மீ|சூ.செ:05
Assistant Manager|A/L
கேட்டை (விருச்சிகம்)

**13728|வே|1989**
உடுப்பிட்டி|இந்து|Canada
170 செ.மீ |சூ.செ :11
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)

**15541|வே|1989**
கொழும்பு-04|இந்து
180 செ.மீ |சூ.செ :09
Doctor (Internship)
பூரட்டாதி (கும்பம்)|இணுவில்

**12287|வே|1989**
இணுவில்|இந்து
165 செ.மீ|சூ.செ :03
Engineer
கேட்டை (விருச்சிகம்)

**16550|வே|1989**
மல்லாகம்|இந்து
170 செ.மீ |சூ.செ :02
Network Engineer
அனுஷம் (விருச்சிகம்)

**15269|வே|1989**
பருத்தித்துறை|இந்து
188 செ.மீ|சூ.செ :09
Quantity Surveyor|Bsc
விசாகம் (துலாம்)

**16712|வே|1989**
மட்டக்களப்பு|இந்து|Col-6
162 செ.மீ |சூ.செ:03
Software Engineer
திருவாதிரை (மிதுனம்)

**16400|வி|1989**
தெல்லிப்பழை|இந்து
155 செ.மீ |சூ.செ : 04
Software Engineer|A/L
பூரம் (சிம்மம்)

**16571|வே|1989**
இணுவில்|இந்து
169 செ.மீ|சூ.செ : 07
Assistant Manger|A/L
ஆய்யிலியம் (கடகம்)

**15444|வே|1989**
கரவெட்டி|இந்து
175 செ.மீ|சூ.செ : 02
Regional Manager|MBA
உத்திரட்டாதி (மீனம்)

**16733|வே|1987**
அம்பாறை|இந்து
168 செ.மீ |சூ.செ : 03
Lecturer|Msc
கார்த்திகை (ரிஷபம்)

**15766|வி|1987**
நல்லூர்|இந்து
163 செ.மீ |சூ.செ : 06
Engineer
பூராடம் (தனுசு)

**13354|வே|1987**
யாழ்.நகரம்|இந்து
175 செ.மீ|சூ.செ : 03
Accountant|HNDA
மிருகசீரிடம் (மிதுனம்)

## சூரியன் + செவ்வாய் உள்ள மணமகள் விபரம்

**16096|வி|1998**
கரவெட்டி |இந்து
145 செ.மீ |சூ.செ: 06
A/L |கேட்டை (விருச்சிகம்)

**15886|க|1998**
கொழும்பு-06|இந்து
Trainee at Bank | ACCA
162 செ.மீ |சூ.செ: 09
பரணி (மேடம்)

**17309|வே|1996**
தொல்புரம் |இந்து
165 செ.மீ |சூ.செ: 11
உத்தரம் (சிம்மம்)
கொழும்பு
பூரம் (சிம்மம்) | பட்டதாரி

**14748|வே|1996**
மானிப்பாய்|இந்து
164 செ.மீ| சூ.செ: 07
Bank Officer|CIMA
அவிட்டம்(மகரம்) |Col

**16039|வே|1996**
கரவெட்டி|இந்து
170 செ.மீ |சூ.செ: 05
Quantity Surveyor பூராடம் (தனுசு)

**16808|வே|1995**
சாவகச்சேரி |இந்து
154 செ.மீ|சூ.செ : 12
BA|மூலம் (தனுசு)

**14092|வே|1995**
பண்டத்தரிப்பு|இந்து
153 செ.மீ |சூ.செ:05
Analyst|Bsc|Dehiwala
அனுஷம் (விருச்சிகம்)

**15985|வே|1994**
கரவெட்டி|இந்து| Canada
153செ.மீ |சூ.செ : 04
Accountant|A/L
திருவாதிரை (மிதுனம்)

**12845|வே|1994**
சாவகச்சேரி|இந்து
Data Process Analyst
பரணி (மேடம்)
165 செ.மீ|சூ.செ:08

**12208|வே|1994**
மானிப்பாய|இந்து|Canada
155செ.மீ |சூ.செ : 02
Accountant|(Diploma)
சதயம் (கும்பம்)

**17099|வே|1994**
தர்மபுரம்|இந்து
158 செ.மீ |சூ.செ : 10
Manager (BA) யாழ்ப்பாணம்
அவிட்டம் (மகரம்)

**14257|வே|1994**
கொழும்புதுறை|இந்து
153 செ.மீ |சூ.செ : 10
Assistant (A/L)
பூராடம் (தனுசு)

**13303|வே|1994**
வேலணை|இந்து
155 செ.மீ |A/L
அவிட்டம் (மகரம்)
சூ.செ : 01

**15673|வே|1994**
கண்டி|இந்து |சூ.செ : 07
158 செ.மீ |A/L
Public Relation Officer
விசாகம் (துலாம்) | புத்தூர்

**17441|ப|1994**
ஏளாலை|இந்து
175 செ.மீ |சூ.செ: 04
Accountant (Msc)
பூரம் (சிம்மம்)

**15128|வே|1993**
யாழ்நகரம்|இந்து
167 செ.மீ |கொழும்பு 06
Manager (ACCA) |சூ.செ:12
உத்தராடம் (மகரம்)

**16126|வே|1993**
யாழ்நகரம்|இந்து
162 செ.மீ |சூ.செ : 06
Accountant (Bsc)
ரேவதி (மீனம்) கொழும்பு 06

**16883|வே|1993**
தெல்லிப்பழை|இந்து |Col 06
165 செ.மீ|சூ.செ : 07
Finance Executive (Bsc)
உத்திரட்டாதி (மீனம்)

**16898|வே|1993**
கோண்டாவில்|இந்து
161 செ.மீ |சூ.செ : 01
Searching (Degree)
சுவாதி (துலாம்)

**13512|வே|1993**
பருத்தித்துறை|இந்து
160 செ.மீ | |சூ.செ : 01
Nurse (Bsc Following)
சுவாதி (துலாம்)

**11767|வே|1992**
காரைநகர்|இந்து
155 செ.மீ|சூ.செ : 09
Accountant (B.com)
பரணி (மேடம்) கொழும்பு 06

**19079|வே|1992**
திருநெல்வேலி|இந்து
150செ.மீ |சூ.செ : 09
ரேவதி (மீனம்)
Beautician (Diploma)

**13578|கோ|1992**
உடுவில்|இந்து
158 செ.மீ |சூ.செ : 02
Project Manager (B.Tech)
உத்திரட்டாதி (மீனம்)

**13819|வே|1991**
பண்டத்தரிப்பு|இந்து
151 செ.மீ| |சூ.செ : 03
Development Officer
(BA) மூலம் (தனுசு)



தற்பொழுது விற்பனையில்
அரச தனியார் தொழில் புரியும் உள்நாட்டு,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 23
இணையத்தில் வாசிக்க
www.rebrand.ly/i23

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு
இலக்கத்தை (Profile No) Whatsapp
94777164524 இற்கு அனுப்பி
குறித்த வரனின் முழுமையான விபரத்தை
பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.05.2021இல் வெளியிடப்பெற்றது.